1972 ஆகஸ்ட் 25]

THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister when the Housing Corporation would be started ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : எல்.ஐ.சி. மூலமாகக் கடன் உதவி கேட்டபொழுது அவர்கள் இப்பொழுது அப்பொழுது என்று சொல்லி கடைசியாக செப்டம்பர் மாதத்திலே பேச்சுவார்த்தை தொடங்குவதாக இருக்கிறார்கள். அந்தப் பேச்சுவார்த்தைகள் நடந்து அவர்கள் இல்லையென்றால் அதற்குப் பிறகு சிண்டிகேட் பேங்கோடு பேச்சு வார்த்தைகள் நடத்த இருக்கிறோம். அவர்கள் 1 கோடி ரூபாய் கடன் தருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். எல்.ஐ.சி.யுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்கள் இல்லை என்று முடிவாகக் சொல்லி விட்டால் அதற்குப் பிறகு சிண்டிகேட் பேங்கோடு பேச்சுவார்த்தை நடத்தியபிறகு முடிவு எடுக்க இருக்கிறோம்.

பெரியதாளை ஆளிப்பாறை

* 338 வினா—திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம், பெரியதாளை கடலில் இருக்கிற ஆளிப்பாறையை (coral reaf) உடைத்து, மீனவர்களுக்கு வசதியான வழி துலக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஆம்.

ஏழை மாணவர்களுக்கு இலவசமாக புத்தகங்கள் வழங்கல்

* 339 வினா—திரு. தி. ஓ. பெரியசாமி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துவக்கப்பள்ளியில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு இலவசமாக புத்தகங்கள் வழங்கும் திட்டம் அவிநாசி தொகுதியில் நடப்பு ஆண்டு மார்ச் மாதம்தான் அமுல்படுத்தப்பட்டது என்பதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், காலதாமதத்தை தவிர்க்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இத்திட்டம் அவிநாசி தொகுதியில் நடப்பு ஆண்டு மார்ச் மாதத்திற்கு முன்பே அமுல் நடத்தப்பட்டது.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

தட்டப்பாறை மைனர் சிறைச்சாலை

* 340 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தட்டப்பாறை மைனர் சிறைச்சாலையைப் பார்வையிடும் குழுவில் அரசாங்கப் பற்றற்ற உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனரா ?

(இ) ஆமெனில், எத்தனை பேர் ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) மூவர், மீண்டும் அங்கத்தினர்களாகவும் ஐவர் புதிதாக அங்கத்தினர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திரு. கே. கே. முத்தையா : தலைவர் அவர்களே, அந்தச் சிறைச்சாலையிலே கல்வி பயில்கின்ற மாணவர்கள் தொழில் நுட்பக் கல்வி பயில்கிறார்களா ? அல்லது கல்வி மாத்திரம் பயில்கிறார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : வெறும் கல்விதான் அங்கு கற்றுத் தரப்படுகிறது.

New Revenue Division for Tiruchirappalli

*341 DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state —

(*a*) whether the Government have any proposal to form a new Revenue Division comprising of Perambalur and Thuraiyur taluks in Tiruchirappalli district ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பெரம்பலூர் துறையூர் ஆகிய வட்டங்களைக்கொண்டு ஒரு புதிய வருவாய் கோட்டம் அமைப்பதற்கு கோரிக்கைகள் வரப்பெற்றன. அவற்றை மாவட்ட ஆட்சியர் பரிசீலித்து வருவாய் வாரியத்திற்கு ஓர் அறிக்கையை அனுப்பியுள்ளார். வருவாய் வாரியத்தின் பரிந்துரை எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஜே. எஸ். இராசு : அரியலூர் ரெவின்யூ டிவிஷனிலே சரிபாதி பெரம்பலூர் வட்டம் அடங்கியிருக்கிறது. ஏறத்தாழ 5 லட்சம் மக்கள் பெரம்பலூர் வட்டத்திலே வாழ்கிறார்கள். அரியலூரிலேயே ரெவின்யூ டிவிஷன் தலைமையிடம் இருப்பது மக்களுக்குச் சிரமமாக இருக்கிறது. ஆகவே, விரைவிலே அரசு இதைச் பரிசீலனை செய்து முடிவு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, வருவாய்த் துறை வாரியத்தின் பரிந்துரை வந்ததற்குப் பிறகு அரசு பரிசீலித்து முடிவெடுக்கும்.